# ஸ்ரீ மாணிக்கவாசகர் சரித்திர கும்மி.
## ஆவிடையார் கோவில் ஆத்மனாதய்யர் எழுதியது

**mAnikkavAcakar carittirak kummi**

**by AviTaiyArkOvil AtmanAta aiyar**

**In tamil script, unicode/utf-8 format**

**Acknowledgements:**

Our Sincere thanks go to the Roja Muthiah Research Library for providing a scanned image/PDF of this work.

We thank Mrs. Meenakshi Balaganesh for her assistance in the preparation of this work

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2021.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் சரித்திர கும்மி.**
**ஆவிடையார் கோவில் ஆத்மனாதய்யர் எழுதியது**

## Source:

ஸ்ரீ மாணிக்கவாசகர் சரித்திர கும்மி.
இஃது திருப்பெருந்துறை யென்னும் ஆவிடையார் கோவில்
மகா-ா - ஸ்ரீ கட்டியம் சுப்பையர் அவர்கள் குமாரர்
K. S. ஆத்மனாதய்யர் அவர்களால் இயற்றப்பட்டு,
பட்டுக்கோட்டை தாலூகா செல்லப்பிள்ளையார்கோவில் செல்லஸாமியய்யர்
குமாரர் - S. S. சுப்பிரமணிய அய்யரவர்களால்
நாகபட்டணம் ஜனேபகார அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
1928, இதன் விலை அணா. 1.
ஜனோபகார பிரஸ், நாகப்பட்டணம்.

------------

சிவமயம்.
ஸ்ரீ குந்தமூல குருவே நம:
உ
கல்வி கேள்விகளில் சிறந்த அன்பர்களே! இப்பூவுலகின் கண் ஆன்றோர்கள் இகபரமிரண்டிலும் சகல பிராணிகளுமுய்யும் பொருட்டு பரமேஸ்வரனை சகுணோபாஸனையாகப் பூஜித்தலையும் அவன் புகழையோதுந் தொழிலையுமே முக்கியமாக சித்தாந்தம் செய்துள்ளார்கள். அவற்றுள் ஈசன் புகழையோதுவதும் அதனால் நற்பயனையடைவதென்பதும் இக்கலியில் மிக்க எளிதென்பது பெரியோர்கள் துணிபு.

இவ்வவிப்பிராயத்திற்கு இணங்கவே திருப்பெருந்துறையென்ற சிறப்புப் பெயர் வாய்ந்ததும் ஸ்ரீபரமேஸ்வரன் திருக்குருந்தில் வீற்றிருந்து ஸ்ரீ வாதவூரடிகளைத் தடுத்தாட்கொண்டு தன்னடியார்க்குரிய பெருமையை உலகத்தவர்க்கறிவிக்கும் பொருட்டு சகல சிறப்புகளும் உதவி அதையே தனக்குப் பரமானந்தமாகக் கொண்ட கருணாநிதியாகிய ஸ்ரீ யோகநாயிகா சமேத ஸ்ரீ ஆத்மனாதப்பெருமான் சதாகாலமும் இவ்விடமே வீற்றிருத்தலினால் மகாவைபவத்தோடு கூடியதுமான ஆவிடையார் கோவிலென்னும் க்ஷேத்திரத்தின்கண் விளங்காநின்ற ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திரத்தை, சகலரும் எளிதில் உணரும் பொருட்டு ருசியுள்ள இசையுடன் சேர்த்து எளிய நடையிலிருந்தால் லோகோபகாரமாயிருக்குமென்று கருதி மேற்படி ஆவிடையார் கோவிலிருப்பவரும் மகா-ள-ஸ்ரீ கட்டியம் சுப்பையர் குமாரருமான K. S. ஆத்மநாதய்யர் அவர்களாலியற்றப்பெற்ற இந்த மாணிக்கவாசக

சுவாமிகளின் சரித்திரக் கும்மியை சில அறிவாளிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்து எனக்குக் கிடைத்தப் பிரதிக்கு இணங்க இதை வெளியிடலானேன்.

அறிவில் சிறந்த உத்தமர்கள் இதில் அடங்கியிருக்கும் விஷயங்கள் உத்தமச் சரித்திரமாகையால் இதில் காணப்படும் பிழைகளை தயவு செய்து எனக்குத் தெரிவித்தால் மறுபதிப்பில் அவைகளைக் களைந்து வெளியிடத் தயாராக இருப்பதுடன் அவ்வுபகாரம் செய்யும் ஆஸ்த்தீகர்களுக்கும் நன்றியறிதலுள்ளவனாக நடந்து கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

பிரபவ- ௵, மாசி ௴ S. S. சுப்பிரமணிய்யர்,

செல்லப்பிள்ளையார் கோவில்.

----------

## ஸ்ரீ மாணிக்கவாசகச் சரித்திரக் கும்மி.

உ

சிவமயம்.

ஆதிகுருவான என்ற மெட்டு.

வாத புரீசன்மேல் கும்மியான் பாடவே
பாதம் பணிந்தேன் கணநாதா
ஆதரவுடனே ஆகுவா கனத்தில்
சாதகமாய் வந்து காப்பாயே. (1)

பாச வினைகளைப் போக்கி யழிக்குமுல்
லாச பழனிவாழ் வேலவனே
தாசின் பணிந்திது செப்பிட வேவிசு
வாசத்துடன் வந்து காத்திடுவீர். (2)

போகத் துடன்மறை நான்முகன் வாமமாம்
பாகத்தி லிருக்கும் உத்தமியே
தாகத்துட னுயர் பக்தர் கும்மிபாட
ஆகத்துடன் நாவில் வந்தருள்வாய். (3)

கங்கைச் சடையிற் றரித்தோனே எழில்
மங்கை சிவயோக நாயகியே
நங்கை மார்கள் கும்மிமகிழ்ந் தடித்திட
இங்குவந் தென்னாளுங் காத்தருள்வீர். (4)

ஆதியிலே திருவாதவூர் தன்னிலே
வேதியராஞ் சிவ நேசருக்கு
ஜோதி வடிவுடன் புத்திர னாயுயர்
வாத புரீசனாய் வந்துதித்தார். (5)

வந்து உதிக்கவும் வானுலகில் தேவர்
சந்தோஷ மாகவே மங்கையர்கள்
வந்துமே மங்கள கீதங்கள் பாடிட
தந்திட்டா ரேவிரை தானங்களும். (6)

சீலம தாய்மேனி நாளும் வளர்ந்திட
பாலரோடு பள்ளி வாசித்திட
ஞாலம் புகழ்ந்திட வேத முறைகளை
கோலா கலத்துடன் தானறிந்தார். (7)

அம்புவில் வித்தையுந் தேர்பரி யேற்றமும்
தெம்புடனே ஆனை யேற்றங்களும்
இன்பொடு யாவருங் கண்டு களித்திட
சம்பு பாதர்கண்டு உவந்தனரே. (8)

மாக்ஷிமை தங்கிய பாண்டிய ராஜனற்
சாக்ஷியாம் வாதவூ ரர்தமையும்
தாக்ஷி யின்றியர சாக்ஷிகள் செய்திட
காக்ஷியுட னழைத் திட்டாரப்போ. (9)

மங்கள மாக மதுரா புரிநாடி
சங்கரனைப் போற்றி வாதவூரன்
தங்கப் பல்லக்கினின் மீது பவனியும்
அங்கத் துடனவர் வந்துவிட்டார். (10)

முத்திரை மோதிரம் ராஜன்கை யால்வாங்கி
பத்தியா யங்கமைச் சரண்டிடவே
சக்தி யுமையருள் சித்தியினால் துஷ்ட
புத்தி க்ஷமணரை வெல்ல வென்று. (11)

தேச தேசங்களுஞ் சென்று க்ஷமணரை
நாசம தாக்கியே பாருலகிற்
ஆசான் மொழிகொண்டு வேத முறைகளை
நேச தாசர்களுஞ் செய்ய லுற்றார். (12)

அங்க தேசாதிபர் வந்து வணங்கியே
தங்கப் பல்லாக்கொன்று தந்திடவே
வங்க தேசாதிபர் கண்டு நவரெத்ன
அங்கக் கவசங்கள் தான்கொடுத்தார். (13)

மானிலத் தோர்களும் கண்டு களித்திட
ஆனிப் பொன்னாலுற்ற பீடங்களும்
மாணிக்க கிரீட மகரக் குண்டலமும்
காணிக்கை மன்னர்கள் தந்திடவே. (14)

வெற்றி கொண்டுமது ராபுரி வந்திட
கொற்றவன் கண்டு மகிழ்ந்திடவே
வெற்றி கொள்ளப்பரி இல்லையென்று அங்கு
நத்தியே வந்து யெடுத்துரைத்தார். (15)

பார்த்துமே தென்னவன் பாருல கிற்பரி
சேர்த்து வருகிறே னென்றிடவே
நூற்றுக் கணக்கானக் கோடி திரவியஞ்
சேர்த்து கொடுத்திட்டான் பாண்டியனும். (16)

---

**வேறு சந்தம்.**

மங்கிலிய ஸ்திரீகள் - மெட்டு.

மன்னன் தந்த பொருளதனை வாங்கியே கைகொண்டு
தென்னவன் பொற்றாமரையில் தோய்ந்து களி கொண்டு. (1)

சுந்தரேசன் பதமலரைச் சுகமுடன் கொண்டாடி
பந்தமதைத் தீர்த்திடுவாய் பரமனே யென்றாடி (2)

இந்தவிதம் இருவிழியில் இடையர் நீர்சொரிய
அந்தரங்க பக்தியுடன் வந்தனங்கள் புரிய (3)

அத்தருணம் அர்ச்சகரும் அணிபூ தீயுங்கொண்டு
இத்தருணம் நலமெனவே ஈய்ந்திட்டா ராசிவிண்டு (4)

தென்னவனுங் கண்டு அதி ஆவலுடன் மன்னர்
சொன்னபரி வாங்க நல்ல சுபச குனமென்று (5)

ஆனை பரி யாட்களோடு கீழ்திசையைக் கொண்டார்
சேனையோடு வாதவூரர் குருந்த வனங்கண்டார். (6)

அண்டிவந்த பேர்கள் தன்னை அரசன்பால் போமென்று
கண்டிப்புட னேயுரைக்க காலாளர்கள் சென்று (7)

பாண்டியனாம் ராஜனிடம் பகர்ந்திட்டா ரப்போது
யெண்டிசைகள் போற்றபரி வாங்குறா ரிப்போது (8)

என்றுநல்ல சேதிசொல்ல ஏந்தல் களிகூர்ந்தார்
நன்றனவே லாயங்கட்ட நன்மனந்தனி லோர்ந்தார். (9)

குருந்த வனந்தனில் குதிரை கொள்ளவேணுமென்று
அருந்தவத்தோர் சுற்றிவரும்போது கண்டாரன்று (10)

சிறந்ததொரு திருத்தமாம் பொய்கைதனைக் கண்டு
அரன் செயலால் வாய்த்ததென ஆனந்தமிகக் கொண்டு (11)

ஞானமது மேலிடவே தீர்த்தமதிற் சென்று
ஸ்நானமது செய்திடவும் பரவசமாய் நின்று. (12)

பரமாத்மநாதர் குரு மூர்த்திதனைக் கண்டார்
பாதார விந்தமதைப் பணிந்து களிகொண்டார். (13)

---

வேறு சந்தம்
வேழ்விமலைகரசே - மெட்டு

அஞ்சலி செய்திடவே குருநாதன்
பஞ்சா க்ஷரந்தன்னையே
விஞ்சையுட னுபதே சஞ் செய்யவும்
வித்தகனைப் போற்றி (1)

ஆசான் மொழிகொண்டு அவர் திரு
வாசகங்கள் பாட
வாசாம கோசரமாங் குருபாதம்
போற்றியே நின்றாட (2)

பக்தனைத் தானழைத்து குருநாதன்
சுத்தவான் நீயேயென்று
உத்தம மாணிக்க வாசகனென்
றேத்தினா ரீசனென்று (3)

மாணிக்க வாசகருங் கொண்டுவந்த
ஆணிப்பொன்றன் னுடனே
காணிக்கை யென்றுமவர் திருப்பணி
பண்ணியே செய்யலுற்றார். (4)

மாதங்கள் மூன்றாகியும் வாதவூர
நேது மோதவில்லையே
என்று கோபத்துடனே பாண்டியனும்
அன்று தூதரிடத்தில் (5)

தேடிப் பிடிப்பீர்கள் தென்னவனை
நாடியே அங்கு சென்று
கண்டிப்புட னழைத்து இவிடத்தில்
கொண்டாரு மென்றறைந்து (6)

உத்திரவுப்படியே தூதுவர்கள்
சுத்தி வனந் தனிலே
பக்தியுட னுருகும் தென்னவன்
நத்தியே கண்டு கொண்டார். (7)

குதிரையும் எங்கென்று கேட்டிடவே
பதிலுரையாது நின்று
பதிக தேவாரமதைப் பாடுமன்பன்
மதியறியாமல் நின்று. (8)

பொங்கிடத் தூதுவர்கள் தென்னவன்றன்
அங்கமாம் நெற்றியிலே
நொந்திடக் கல்லை வைத்து சவுக்குக்கொண்
டுந்தி யடித்திடவே. (9)

பொய்யா ஒருவன் வந்து மிகத்தேற்றி
ஐயா அடிக்காதீர்கள்
நேயர் தந்த பொருளுக் கானபரி
ஈய நான் பெற்றுக் கொள்வீர். (10)

ஆவணி மாதந்தனில் மூலமுடன்
மேவிய தினத்தன்று
தேவையான பரிகள் கொடுத்துங்கள்

கோவை மகிழச் செய்வேன். (11)

மாணிக்க வாசகரே இந்த ரெத்ன
காணிக்கை கொண்டுடனே
பாண்டி மன்னவன்றனை களிக்கச்செய்
வேண்டும் பரி வருமே. (12)

---

**வேறு சந்தம்.**
வாரும் வளைச் செட்டியாரே - மெட்டு.

சொன்னகுருபாதமதை தென்னவன் வணங்கியவர்
மன்னவனார் சமுகமேக நன்னயமாய்த் தானடந்தார் (1)

புரவி வரவில்லையென்று கரமதிற் செங்கோலெடுத்து
அரண்மனை வாசலின்முனம் வரவெதிரைப் பார்க்கமன்னன் (2)

யாவர்களும் பார்த்திடவே ஆவலுடன் தென்னவனும்
நாவலர் புகழுந் தினம் ஆவணியாம் மாதமதில் (3)

நக்ஷத்திர மூலமென்று பக்ஷமுள்ள மன்னவரே
அக்ஷயமாய்க் குதிரைகள் நல்லெக்ஷணமாய் வந்துவிடும் (4)

யென்றுரைக்க மன்னவரும் நன்றெனவே மந்திரியும்
அன்றுமுதல் சந்தோஷமாய் சென்றுமீசனடி தொழுதார் (5)

சந்தோஷமாய் மன்னவனும் அந்தமுள்ள தென்னவனும்
சுந்தரேசன் பாதமதை சந்ததமும் போற்றிவந்தார் (6)

தென்னவ னுரைத்தபடி மன்னவனு மகிழ்வுடனே
தன்னகரை யலங்கரித்து நன்னயமாய் தானிருந்தார் (7)

அந்தரத்தில் தேவர்களும் கந்தமலற் றூரிடவும்
அந்தரங்க பக்தனுக்கு வந்தருளச் சித்தங்கொண்டு (8)

-------------

**வேறு சந்தம்**
ஆதிகுருவான - மெட்டு

ஓடியே ஈசனுங் குந்தவனந் தன்னில்
தேடி நரியைப் பரியாக்கி
கோடிக் கணக்கானப் பரிகளைக் கொண்டு
வேதப் பரியின் மேல் தானேறி. (1)

செந்தூள் பரந்திட ஐந்து பிரிவாக
விந்தையுடன் வேக மாய்நடத்த
சந்தோஷ மாகவே மன்னவனு மெதிர்
வந்து பணிந்தங் கழைத்திடவே. (2)

தென்ன வனைக்கண்டு விந்தையுட னேயம்
மன்னவ னங்கு மகிழ்வுடனே
மின்ன லொளியைப்போல் தோன்றும் புரவிக்கி
நன்னய யாபாரி யெங்கே யென்றார். (3)

பார்த்திபனே முன்னம் பொருள்கொடுக் கும்போது
பார்த்தது தானெஜ மானையென்று
வாதவூரனு மெடுத்துரைக்கச் சிவன்
நாதனா னென்றுப் புரவியின் மேல் (4)

பரிகள் தன்னை விலக்கிக்கொண்டு ஈசன்
பாண்டியராஜ னெதிராகப் போய்
பரிகள் வேண்டுமோ இல்லாவிடில் பணம்
நானுந் தருகிறே னென் றிடவே (5)

யெந்தனுக் குப்பணம் வேண்டுவ தில்லையே

அந்தமுடனே புரவிகள் தான்
விந்தையுடன் மன்னன் வேண்டுமே யென் றிட
சந்தோஷ மாகக் கயிர்மாறி (6)

மங்கள மாகவே மன்னவனு மங்கு
சங்கரன் தந்த பரிகளுக்கு
தங்கத்தினால் காலில் வெண்டயங்கள் போட்டு
அங்கத் துடனகர் சுத்திவந்து (7)

லாயமது தனில் கட்டிடவு மன்று
ராவில் பரியுந் நரியாகவே
தூய அரண்மனை துன்னும் மாளிகை
துண்ட ரீகங்கொண் டூளையிட (8)

மன்ன வனுமதி கோபமதாகவே
தென்னவனை யழைத்து வந்து
யென்னமா யமது செய்துவிட் டாயென்று
மன்னன் சவுக்கா லடித்திடவே (9)

அங்கமது நோக பக்த ரடிபட
சங்க ரனுங்கண்டு அன்னகரில்
கங்கை முதலாறு பத்து அறுகோடி
தீர்த்தமும் வரவென் றருள்செய்ய (10)

வைகை நதியிற் ப்ரவாகமும் வந்திட
ஐயோவென்று ஜெனம் நொந்தழுக
ஐயோ வென்றமுறை கேட்கவே மன்னவனும்
ஆசார வாசலில் வந்திடவே (11)

அரண்மனை சுத்தி வெள்ளமும் வந்திட
அரசனுங் கண்டு பயத்துடனே
சரசமாய் வீட்டுக்கோ ராளுடனே வரக்
கட்டளையிட்டு அணை யடைக்க (12)

வீட்டுக் கொருசனம் வந்திடவு மங்கு
வந்தியெனப் பேர் கொண்டமாது
யீட்டு கட்டளைக்கி ஆளுக ளில்லாமல்
ஏங்கித் தவித்திட ஈசனும் போய் (13)

வேலைகள் செய்யவே ஆளுகள் வேண்டுமோ
வேண்டிய வேலைகள் நானும் செய்வேன்
கூலி கொடுப்பவர்க் கின்றுழைப் பேனென
வேலை இருக்கென் றென்றுரைத் திடவே. (14)

என்ன வேலைகளுஞ் செய்கிற தென்றுமே
ஏந்திழையைக் கேட்க அப்போ சொல்வாள்
மன்னவன் சொல்படி யெந்தன் கரைக்காக
மண்கொண் டணைகட்ட வேண்டு மென்றாள் (15)

கூடைமண் வெட்டியுங் கையிற்கொண்டு அரன்
கூலியாகத் தந்தப் பிட்டமுதை
கூடையிற் கொட்டவும் வாங்கி யணைக்கரை
வேகம தாகப்போய் நின்று கொண்டு (16)

வேலைகள் செய்யுஞ் ஜெனங்களை யழைத்து
வேண்டிய பிட்டமுதைக் கொடுத்தவ்
வேலைக் காரருடன் வேடிக்கை யாகவே
பேச்சுக்கள் பேசியே நின்றிருந்தார். (17)

கோபத்துடன் மன்னன் கோலெடுத்துக் கையில்
கோலா கலமாக வெள்ளமோட
தாபத்துடன் வந்தி வேலைக்காரன் பேரில்
தாவியடிக்க ஈசன் மறைந்தார் (18)

அரசன் அரன்மீ தடித்திட வும்மடி
அரசன் முதுகின்மேல் பட்டிடவும்
சராசர முதல் எல்லாம் அடிபட

சந்தி ரக்குலன் திகைத்திடவே (19)

ஆகாய வாணீயா லாத்மனா தீசனல்
வாக்கொன்று தந்திட பாண்டியனும்
ஆகா அடாதுமே செய்தோ மிப்போவென்று
வாகுடன் தென்னவனைப் போற்ற (20)

தென்ன வனுமீச னுத்திர வுப்படி
மன்னனிடம் விடை பெற்றுமப்போ
அன்னகர் சிவஸ்த லங்கள் முதல்யாவும்
நன்னயமாகவே சேவை செய்தார். (21)

வாதவூ ரன்மகிழ் குந்தவனந் தனில்
வந்து தெற்குமுக மாயிருக்கும்
வேத நாதனது பாதமலர்தனை
வேண்டித் துதிசெய்து போற்றிடவே (22)

மாது சிவயோக தேவியுமை யுடன்
மகிழ்ந்துமே ஈசன் பாருலகிற்
வாதவூ ர்தன்னை வாவென் றழைத்தங்கு
ஞான உபதேசஞ் செய்திடவும் (23)

வானுல கில்புஷ்ப மாரி சொரிந்திட
வாதபுரீச ப்ரதிஷ்ட்டை செய்து
ஆனந்த மாய்ஜெக தீசனு மையுடன்
ஆகாயந் தன்னில் மறைந்தா ரப்போ (24)

மங்கையரே மனஞ் சஞ்சலி யாமலே
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி
மங்கள மாகவே பக்தர் திருவிழா
மகிமை சொல்லுவேன் கேளுங்கடி (25)

ஆண்ட தனிலேயே ரெண்டு திருவிழா

ஆனியும் மார்கழி யென்றிடுவார்
ஆரம்ப முதல் நடத்திடும் விந்தையை
ஆனந்தமாக எடுத்துரைப்பேன் (26)

வீதிகள் தோறுமே தோரணங் கட்டுவார்
விதவித மாகவே கால்கள் நட்டு
சோதிப்ர காசமா யெங்கும் விளங்கிட
கியாஸு லைட்டுகள் போட்டிடுவார். (27)

தொண்டர்கள் போற்றிடும் மண்டபந் தன்னில்
தோரணங்கள் நன்றாய்க் கட்டிடுவார்
அண்டர் மகிழவே வாழைகளுங் கட்டி
பூரண தீபங்க ளேற்றிடுவார். (28)

கட்டி யசைந்தாடு மாலைகள் தொங்கவே
பட்டினால் மேல்கட்டு கட்டிடு வார்
நெட்டியினால் வேணப் பொம்மைகள் கட்டியே
நேர்த்தியுடன் பக்தர் வந்திருப்பார். (29)

மட்டுக் கடாங்கா தெடுபிடிகள் நன்றாய்
வரிசை தப்பாமல் நிற்குதுபார்
பட்டுக் குடைகள்மேல் பளப்பள வென்று
இட்ட சரிகை தெரியுதுபார். (30)

மங்கள மாகவே மாணிக்க வாசகர்
சங்கரன் பாத மலர்போற்றி
சங்கத் தொனியதிர் வேட்டு முழங்கிட
தங்கப் பல்லாக்கினில் வந்திடுவார். (31)

யெண்டிசை போற்றிட சந்தரர் சூரியர்மீது
ரெண்டினி லேவலம் வந்திடுவார்
அண்டிய பேர்களும் வந்து தெரிசித்து
கொண்டிடுவா ரிஷ்ட காமியமும். (32)

மூன்றினில் பூதமாம் வாகனமீதவர்
மூவுலகத் தோரும் பார்த்திடவே
சான்றோர் புகழ்ந்திடும் விந்தை தனைக்கண்டு
சந்தோஷ மாகவே போற்றுங்கடி. (33)

நாலாந் திருவிழா நாட்டியப் பெண் சதிர்
நாக ரீகமா யாடிடுவார்
கோலா கலமாகக் கோரிட அன்பர்கை
லாச வாகனத் தமர்ந்திடுவார். (34)

அஞ்சாந் திருவிழா முத்துப்பல் லாக்கினிற்
அற்புதமாக யமைந் திடுவார்
வெஞ்சா மரைகளும் வீசிட சீர்பெரும்
தஞ்சைநகர் பியாண்டு ஊதிடுவார். (35)

ஆறாம் திருவிழா வாதபு ரீசனும்
ஆனை வாகனமீ தேறிடுவார்
ஆறா வமுதென கண்டு களித்திட
வாணக் காக்ஷியோடு வந்திடுவார். (36)

எங்குங் கிடையாத வாதபுரீ சர்க்கு
கங்கை தீர்த்தமுதல் கொண்டுவந்து
சங்கத்தி னாலபி ஷேகங்கள் பண்ணுவார்
சங்கரனைப் போல லங்கரிப்பார் (37)

வேண்டிய புஷ்பங்கள் சாற்றிக்கொள்வார் பக்தர்
வேதியர் வேதங்க ளோதிடுவார்
வேண்டிய வரங்கள் தந்திட யேழினிற்
வெள்ளி ரிஷபமீ தேறிடுவார். (38)

மட்டுக் கடங்காத வெண்புரவி தன்னில்
எட்டாந் திருவிழா ஏறிடுவார்
வட்டத் தீவட்டிகள் வரிசை தப்பாமல்

திட்ட முடனே பிடித் திடுவார். (39)

ஒதிய ஒன்பதில் ஓர்ந்திடுவார்
ஓயாமல் வேட்டுக்கள் போட்டிடுவார்
ஊதிடுவார்கொம்பு தம்பட்டங் கேட்டிட
ஓகோவென்றே வடம் தொட் டிடுவார். (40)

பத்தாம் திருவிழா பஞ்சப்ர காரமும்
பக்தர் பவனியும் வந்திடுவார்
பக்தரருள் செய்த வாசக காக்ஷியை
பக்தியா யெல்லோருங் கேட்டிடுவார். (41)

வாகா யமர்ந்திட்ட வெள்ளி ரதந்தனில்
வாதவூரர் தானும் வந்திடுவார்
ஆகாச வாண மவுட்டுக ளனேகம்
ஆனந்த மாகவே விட்டிடுவார். (42)

யாவருங் கண்டு வணங்கி யருள் பெற
வேண்டியே ஆத்மே சன்னிதியில்
தேவருங் கண்டு களித்திடவே அபி
ஷேகங்களும் நன்றாய்ச் செய்துகொள்வார். (43)

ஞான உபதேசஞ் செய்துகொள்ள பக்த
னான வாதவூரன் தமக்கப்போ
ஆனந்த மாகவே விபூதிப்ர ஸாதமும்
அன்புடன் கொண்டுமே சாற்றிடுவார். (44)

வேதபா ராயணம் வேதிய ரோதிட
ஊதிட சங்கங்கள் தான் முழங்க
வேதகுருவடி வாகிய சன்னிதி
வேண்டியே பக்தருஞ் சென்றிடுவார். (45)

பக்தன் மிகப்பரி சுத்த மனதுடன்

சத்குருமந் த்ரோப தேசமதை
தத்துவ மாயடைந்துத் தமமாம் பர
மானந்த காக்ஷியுந் தந்திடுவார். (46)

பக்தர் திருவிழா பாரினி லுள்ளவர்
பக்தி யோடுவந்து பார்த்திடவும்
புத்திர சந்தான மாயசு விர்த்தியும்
முக்தியும் பக்தியும் பெற்றிடுவார். (47)

ஆவிடையார் கோவி லாத்ம னாதய்யர்
ஆவலுடன் செப்பும் கும்மிதனை
மேவியே இன்பமாய்ப் படித்தவர் பர
மானந்த பேரின்பங் கொண்டிடுவார். (48)

**-------- முற்றிற்று ---------**